**இனிமையிலும் இனிமையான குழந்தைகளே! தந்தை உங்களுக்கு ஞானத்தின் மூன்றாவது கண் அளிக்க வந்துள்ளார். அதன் மூலம் நீங்கள் சிருஷ்டியின் முதல், இடை, கடையை அறிந்து புத்திசாலி ஆகி உள்ளீர்கள்.**

கேள்வி: ஆத்மா மற்றும் சரீரம் இரண்டையும் தூய்மையாக்கவும் மற்றும் இராஜ்ய பதவியின் அதிகாரம் பெறுவதற்குமான எளிய விதி என்ன?

பதில்: உங்களிடம் தேகத்துடன் சேர்த்து எதெல்லாம் பழையது, தேவையற்றது உள்ளதோ அதை பண்டமாற்றம் செய்யுங்கள். தந்தைக்கு ஒப்படைத்துவிடுங்கள். முழுமை யாக பலி ஆகுங்கள். தந்தையை டிரஸ்டி ஆக்குங்கள். ஸ்ரீமத்படி நடந்து கொண்டே இருங்கள். அப்பொழுது ஆத்மா மற்றும் சரீரம் இரண்டும் தூய்மையாக ஆகிவிடும். இராஜ்ய பதவி பலனாகக் கிடைத்துவிடும். ஜனகர் கூட சமர்ப்பணம் ஆனார் அதனால் அவருக்கு ஜீவன் முக்தி கிடைத்தது. குழந்தை களாகிய நீங்களும் தந்தையை வாரிசு ஆக ஆக்கினீர்கள் என்றால் 21 பிறவிகளுக்கான அதிகாரம் கிடைத்து விடும்.

பாடல்: கண்ணற்றோருக்கு வழி காண்பிப்பாய் பிரபுவே..... ஓம் சாந்தி

குழந்தைகள் பாட்டு கேட்டீர்கள். இதில் பக்தர்கள் பகவானை அழைக்கிறார்கள். பகவானை முழுமையாக அறியாத காரணத்தால் மனிதர்கள் எவ்வளவு துக்கத்துடன் இருக் கிறார்கள். எவ்வளவு தலையிலடித்துக் கொண்டே யிருக்கிறார்கள் பக்தி மார்க்கத்தில். இந்த பிறவியின் விஷயம் மட்டுமல்ல, எப்பொழுது முதல் பக்தி மார்க்கம் ஆரம்பமானதோ அப்பொழுது முதல் அடி வாங்கிக் கொண்டேயிருக்கிறார்கள். பாரதத்தில் தான் பூஜிக்கத்தக்க தேவி தேவதைகளின் இராஜ்யம் இருந்தது. அதனைத்தான் சொர்க்கம், சத்தியமான கண்டம் என்று அழைக்கப் பட்டது. இப்பொழுது பாரதம் பொய்யான கண்டமாக உள்ளது. பாரதத்தின் மகிமை மிகவும் உயர்ந்தது. ஏனெனில் பாரதம் பரமபிதா பரமாத்மாவின் ஜன்ம பூமி ஆகும். அவரது உண்மையான பெயர் சிவனே ஆகும். சிவஜெயந்தி கொண்டாடுகிறார்கள். ருத்ர அல்லது சோமநாத் ஜெயந்தி என்று கூறப்படுவதில்லை. சிவஜெயந்தி அல்லது சிவராத்திரி என்று கூறப்படுகிறது. இப்பொழுது எல்லோரும் கண்இல்லாதவர்களாக, புத்தியற்றவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் அனை வருக்குள்ளும் 5 விகாரங்கள் பிரவேசமாகியுள்ளது. இராவணன் கண் இல்லாத வராக, புத்தியற்ற வராக ஆக்கியுள்ளான். ஒருவருக்கொருவர் துக்கம் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். பாரதம் சொர்க்கமாக இருக்கும்பொழுது துக்கத்தின் பெயர் இருக்கவில்லை. சொர்க்கத்தை ஸ்தாபனை செய்பவர் ஹெவன்- காட் ஃபாதர் (சொர்க்கத்தின் இறை தந்தை) ஆவார். இப்பொழுது எல்லா பக்தர்களின் பகவான் அவசியம் ஒருவராகத் தான் இருக்க வேண்டும் அல்லவா? எல்லோருமே கண்ணில்லா தவர்களாக இருக்கிறார்கள். அதாவது ஞானத்தின் கண் இல்லை. பகவான் கூறுகிறார் நான் உங்களுக்கு இராஜயோகம் கற்பிக்கிறேன். ஸ்ரீமத் பகவத் கீதை முக்கிய மானது. ஸ்ரீ அதாவது உயர்ந்த வழி மூலமாக இப்பொழுது நீங்கள் புத்திசாலி களாக ஆகிக் கொண்டிருக் கிறீர்கள். திவ்ய திருஷ்டி அதாவது ஞானத்தின் மூன்றாவது கண் அளிக்கிறார். உண்மையில் ஞானத்தின் மூன்றாவது கண் பிராமணர்களாகிய உங்களுக்குக் கிடைக்கிறது. அதன் மூலம் நீங்கள் தந்தையையும் தந்தையின் படைப்பின்

முதல், இடை, கடையை அறிந்து கொண்டு விடுகிறீர்கள்.

இச்சமயம் தேக அகங்காரம் அல்லது 5 விகாரங்கள் எங்கும் நிறைந்துள்ளது. எனவே எல்லோரும் காரிருளில் இருக்கிறார்கள். குழந்தைகளாகிய உங்களிடம் தெளிவு உள்ளது. உங்களது ஆத்மா முழு உலகத்தின் சரித்திரம் பூகோளத்தை அறிந்துள்ளது. இதற்கு முன்பு நீங்கள் எல்லோருமே அறியாமையில் இருந்தீர்கள். ஞானம் என்ற மையை சத்குரு அளிக்கும் பொழுது அஞ்ஞானம் என்ற இருள் அழிந்தது... பூஜிக்கத்தக்கவர்களாக இருந்தவர்களே மீண்டும் பூஜாரி ஆகிவிட்டனர். பூஜிக்கத்தக்கவர்கள் வெளிச்சத்தில் உள்ளனர், பூஜாரிகள் இருளில் உள்ளார்கள். பரமாத்மாவை நீங்களே பூஜைக்குரியவர் மற்றும் நீங்களே பூஜாரி என்று சொல்ல முடியாது. அவரோ பரம பூஜ்யராக இருக்கின்றார். அனைவரையும் பூஜிக்கத் தக்கவராக ஆக்குபவர். அவர் பரம பூஜ்ய பரமபிதா பரமாத்மா என்று அழைக்கப்படுகிறார். கிருஷ்ணரை அவ்வாறு கூறுவார்களா என்ன? அவரை அனைவரும் காட் ஃபாதர் என்று கூறமாட்டார்கள். நிராகார் பரமாத்மாவைத்தான் அனைவரும் காட்ஃபாதர் என்கிறார்கள். அவரும் ஆத்மா தான். ஆனால் பரமன் (எல்லைக்கப்பால் உள்ளவர்) ஆவார் எனவே அவர் பரமபிதா பரமாத்மா என்று அழைக்கப்படுகிறார். ஆத்மா மற்றும் பரமாத்மாவின் ரூபம் ஒன்று தான். அவசியம் நாம் ஆத்மாக்கள் ஆவோம். அவர் பரம ஆத்மா என்றும் பரந்தாமத்தில் வசிப்பவர் ஆவார். ஆங்கிலத்தில் அவர் சுப்ரீம் ஸோல் என்று அழைக்கப் படுகிறார். தந்தை கூறுகிறார் ஆத்மாக் களும் பரமாத்மாவும் வெகுகாலமாக பிரிந்திருந்தன என்று நீங்கள் பாடவும் செய்கிறீர்கள். அப்படியின்றி பரமாத்மா பரமாத்மாவிடமிருந்து வெகுகாலமாக பிரிந்திருந்திருந்தது என்பதல்ல. முதல் நம்பர் அறியாமையாவது ஆத்மாவே பரமாத்மா, பரமாத்மாவே ஆத்மா என்று கூறுவது. ஆத்மாவோ, பிறப்பு இறப்பில் வருகிறது. பரமாத்மா புனர் ஜென்மத்தில் வருகிறாரா என்ன? நீங்கள் பாரதவாசி சொர்க்கவாசி, பூஜிக்கத் தக்கவர்களாக இருந்தீர்கள் என்று தந்தை வந்து புரிய வைக்கின்றார். இது முழுமையாக ஈஸ்வரிய குடும்பம் ஆகிவிட்டது அல்லவா? சரி இவ்வளவு மட்டுமாவது கூறுங்கள், தாய் தந்தை என்று யாரை கூறுகிறீர்கள்? இதனை கூறுவது யார்? ஆத்மா கூறுகிறது நீங்கள் தான் தாயும் தந்தையும் ஆவீர்கள். உங்களது கிருபையினாலே சொர்க்கத்தினுடைய அளவற்ற சுகம் கிடைக்கிறது. நமக்கு சொர்க்கத்தில் சுகம் கிடைத் திருந்தது. தாய் தந்தை யரான நீங்கள் வந்து சொர்க்கத்தினை ஸ்தாபனை செய்கிறீர்கள். ஆக நாங்கள் உங்களது குழந்தைகள் ஆகிறோம். தந்தை கூறுகிறார், நான் சங்கமத்தில் தான் வந்து புது உலகிற்காக இராஜயோகம் கற்பிக்கிறேன்.

நீங்கள் என்னை மறந்து விட்டீர்கள் என்று தந்தை வந்து புரிய வைக்கின்றார். எனக்கோ சிவஜெயந்தி கூட பாரதத்தில் கொண்டாடுகிறீர்கள் அல்லவா? சிவராத்திரி என்றும் பாடப் படுகிறது. எந்த ராத்திரி? இது பிரம்மாவின் எல்லை யில்லாத இரவு ஆகும். சங்கமத்தில் வந்து இரவை பகலாக அதாவது நரகத்தை சொர்க்க மாக ஆக்குகிறார். சிவராத்திரி என்பதன் பொருள் கூட யாருக்குமே தெரியவில்லை. பகவான் நிராகார் ஆவார். மனிதர்களுக்கோ பிறவி பிறவி யாக சரீரத்தின் பெயர் மாறுகிறது. எனக்கு சரீரத்திற்கென்று பெயரே இல்லை என்று பரமாத்மா கூறுகிறார். எனது பெயர் சிவனே ஆகும். நான் வானபிரஸ்த நிலையில் இருக்கும் ஒரு வயோதிக சரீரத்தை ஆதாரமாக எடுக்கிறேன். அவர் பூஜிக்கத்தக்கவராக இருந்தார். இப்பொழுது பூஜாரி ஆகியுள்ளார். சிவபாபா வந்து

சொர்க்கத்தை படைக்கிறார். நாம் அவரது குழந்தைகள் ஆவோம். எனவே அவசியம் நாம் சொர்க்கத்தின் எஜமானராக இருக்க வேண்டும் அல்லவா? சிவபாபா தான் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் ஆவார். பிரம்மா, விஷ்ணு சங்கரரின் பார்ட் தனித்தனி ஆகும். ஒவ்வொரு நடிகருடைய பார்ட் தனிப்பட்டது. ஒவ்வொரு ஆத்மாவிற் குள்ளும் தனது சுகத்தின் பாகம் பொருந்தியுள்ளது. தந்தை கல்ப கல்பமாக வந்து பாரத வாசிகளை சொர்க்கவாசி ஆக்குகிறார். அவரை மறந்துவிட்டனர். இன்னார் சொர்க்கவாசி யானார் என்று கூறுகிறார்கள். அடே, இப்பொழுதோ நரகம் ஆகும். எனவே அவசியம் மறுபிறவி நரகத்தில் தான் எடுப்பார்கள் அல்லவா? பின் நீங்கள் அவருக்கு நரகத்தின் உணவு ஏன் படைக்கிறீர்கள். சொர்க்கத்திலோ ஏராளமான வைபவங்கள் உள்ளன. பின் அவரது ஆத்மாவை வரவழைத்து நரகத்தின் உணவு ஏன் ஊட்டுகிறீர்கள். தூய்மை இல்லாத பிராமணர்களுக்கு அளிக்கிறீர்கள். வெங்காயம் ஆகியவை கொடுக்கிறீர்கள். அங்கு இவை எல்லாம் இருக்குமா என்ன? எனவே பாருங்கள், பாரதத்தின் நிலைமை என்ன ஆகிவிட்டது என்று. பகவான் கூறுகிறார் இப்பொழுது நான் உங்களுக்கு ஞானத்தின் மூன்றாவது கண் கொடுக்கிறேன். நீங்கள் மீண்டும் இராஜக்களுக்கெல்லாம் இராஜா ஆகிவிடுவீர்கள். தேவி தேவதைகள் 84 பிறவிகள் அனுபவித்து பூஜிக்கத்தக்க நிலையிலிருந்து பூஜாரி ஆகிவிட்டார்கள். நாம் சிவபாபா வின் வாரிசு ஆகியிருந்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். சிவபாபா சொர்க்க வாசியாக ஆக்கியிருந்தார். அதனால் தான் அவரை காட் ஃபாதர் கருணை புரியுங்கள் என்று எல்லோரும் நினைவு செய்கிறார்கள். ஓ, சாதுக் களும் சாதனை செய்கிறார்கள் ஏனென்றால் இங்கு துக்கம் இருக்கிறது. எனவே நிர்வாண தாமம் செல்ல (முக்தியை) விரும்புகிறார்கள். ஆத்மா பரமாத்மாவுடன் இரண்டற கலந்து விடுவதோ ஒன்றும் கிடையாது. இவ்வாறு நினைப்பது தவறு. நாம் ஆத்மாக்கள் பரந்தாமத்தில் வசிப்பவர்கள் ஆவோம் என்று இப்பொழுது நீங்கள் கூறுகிறீர்கள். நாம் ஆத்மாக்கள் தான் தேவி தேவதை குலத்தில் வருவோம், பிறகு 84 பிறவிகள் அனுபவிப் போம். ஆத்மாக்களாகிய நாம் தான் பின் தேவதா குலம், சத்திரிய குலத்திலிருந்து வைசிய, சூத்திர குலத்தில் வருவோம். சிவபாபா பிறப்பு இறப்பில் வருவதில்லை. வந்து பாரதத்தை சொர்க்கமாக ஆக்குகிறார். சத்யுகத்தில் சூரிய வம்சத்தினரில் ஸ்ரீ லட்சுமி ஸ்ரீ நராயணரின் பரம்பரை இருந்தது என்றும் பாடப்படுகிறது. எப்படி கிறிஸ்துவ குடும்பத்தில் முதலாவது எட்வார்டு, இரண்டாவது எட்வர்டு, மூன்றாவது எட்வர்டு என்று ஏற்படுகிறது. அதேபோல அங்கும் முதலாவது லட்சுமி நாராயணர், இரண்டாவது லட்சுமி நாராயணர், மூன்றாவது இதுபோல 8 பரம்பரை நடக்கிறது. இப்பொழுது பிராமணர்களாகிய உங்களுக்கு மூன்றாவது கண் கிடைத்துள்ளது. தந்தை வந்து ஆத்மாக் களிடம் பேசுகிறார். நீங்கள் இதுபோல 84 பிறவியின் சக்கரம் சுற்றி வந்து இவ்வளவு இவ்வளவு பிறவிகள் எடுத்துக் கொண்டு வந்துள்ளீர்கள். தேவதை க்ஷத்திரியர், வைஷியர், சூத்திரர் என்று காண்பிக்கும் வர்ணங்களின் ஒரு சித்திரம் கூட அமைக்கிறார்கள். நாம் பிராமணர்கள் உச்சியில் இருப்பவர்கள் என்று இப்பொழுது நீங்கள் அறிந்துள்ளீர்கள். இச்சமயம் நாம் நடை முறையில் ஈஸ்வரிய குழந்தைகள் ஆவோம். இச்சமயம் இராஜயோகம் மற்றும் ஞானத்தின் மூலம் நமக்கு அளவற்ற சுகம் கிடைக்கிறது. ஒரு சிலரோ சூரிய வம்ச இராஜா ராணியின் ஆஸ்தி பெறு கிறார்கள். ஒரு சிலர் சந்திர வம்சத்தினைப் பெறுகிறார்கள். முழு இராஜதானி ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரும் அவரவர் புருஷார்த்தத்தின் மூலம் அந்த

பதவியை அடைவார்கள். யாராவது நாம் படித்துக் கொண்டிருக்கும்போதே ஒருவேளை சரீரம் விட்டுப்போனால் என்ன பதவி கிடைக்கும் என்று கேட்டால் பாபாவினால் கூறமுடியும். யோகத்தினால் தான் ஆயுள் நீளும், விகர்மங்கள் விநாசம் ஆகும். தூய்மை இல்லாத நிலையிலிருந்து தூய்மை ஆவதற்கு வேறு வழியே கிடையாது. பதீத பாவனர் என்று கூறும்பொழுதே பகவான் நினைவிற்கு வருகிறார். ஆனால் பகவான் யார் என்பது யாருக்கும் தெரியாது. நான் வருவதே பாரதத்தில் என்று பாபா கூறுகிறார். இதை எனது ஜன்ம பூமி ஆகும். சோமநாத்தின் கோவில் எவ்வளவு அழகாக இருந்தது. இது தந்தை தான் குழந்தை களுக்கு புரிய வைக்கின்றார். அது பிறகு சாஸ்திரங்களாக ஆகின்றன. பக்தி மார்க்கத்தில் தான் இந்த நினைவார்த்தங்கள் அமைப்பது ஆரம்ப மாகிறது. பூஜாரி ஆகும்பொழுது முதல் முதலில் சோமநாத்தின் கோவில் அமைக் கிறார்கள். பாரதமோ சத்யுக திரேதாவில் மிகவும் செல்வம் நிறைந்த நாடாக இருந்தது. கோவில்களில் ஏராளமான செல்வம் இருந்தது. பாரதம் வைரம் போல இருந்தது. இப்பொழுதோ ஏழையாக, சோழிபோல ஆகியுள்ளது. மீண்டும் தந்தை வந்து பாரதத்தை வைரம்போல ஆக்குகிறார். முழு விருட்சமே பட்டுப்போன நிலையை அடைந்து விட்டது. தந்தை கூறுகிறார் லட்சுமி நாராயணரை மணம் முடிக்க தகுதி உள்ளதா என்று உங்கள் முகத்தைப் பாருங்கள். நாரதரின் கதை உள்ளது அல்லவா? தூய்மையற்ற ஆத்மா தூய்மையான லட்சுமி அல்லது நாராயணரை எப்படி மணம் செய்ய முடியும்? விகாரத்தில் சென்றார்கள் என்றால் பாஸ்போர்ட் ரத்தாகி விடுகிறது. நாம் பாபா மம்மாவின் மனம் என்ற சிம்மாசனத்தில் அமருபவர் ஆகும் வகையில் அப்பேர்ப்பட்ட முயற்சி செய்கிறோமா என்று தங்களை தாங்களே பார்த்துக் கொள்ள வேண்டி யுள்ளது. இதுவோ தூய்மை இல்லாத உலகம். தூய்மை தான் முக்கியம். இப்பொழுது ஆரோக்கியம், செல்வம், மகிழ்ச்சி எதுவுமேயில்லை. இது கானல் நீர் போன்ற இராஜ்யம் ஆகும். இது பற்றி கூட சாஸ்திரங்களில் துரியோதனனின் கதை உள்ளது. துரியோதனன் என்று விகாரிக்கு கூறப்படுகிறது. எனது மானத்தை காப்பாற்றுங்கள் என்று திரௌபதி கூறுகிறாள். இவர்கள் திரௌபதி ஆவார்கள் அல்லவா? தந்தை எவ்வளவு நல்ல முறையில் புரிய வைக் கின்றார். எந்த அளவு புத்தியோகம் முழுமையாக ஈடுபட்டிருக்குமோ அந்த அளவு தாரணையும் ஆகும். ஞானம் பிரம்மச்சரியத்தில் தான் கற்றுக் கொள்ளப்படுகிறது. இல்லறத்தில் இருந்த படியே தாமரை மலர் போல இருக்க வேண்டும் என்று தந்தை கூறுகிறார். இரண்டு புறமும் கடமையை நிறைவேற்ற வேண்டும். அவசியம் இறக்கவும் வேண்டியுள்ளது. இறக்கும் பொழுது மக்களுக்கு மந்திரம் கொடுக்கிறார்கள். நீங்கள் அனைவருமே இறக்கப் போகிறீர்கள் என்று தந்தை கூறுகிறார். நான் எமனுக்கெல்லாம் எமன் அனைவரையும் திரும்ப அழைத்துச் செல்பவன் ஆவேன். எனவே மகிழ்ச்சி ஏற்படவேண்டும் அல்லவா? பிறகு யார் நல்ல முறையில் படிப்பார்களோ அவர்கள் சொர்க்கத்தின் எஜமானர் ஆவார்கள். படிக்கவில்லை என்றால் பிரஜை பதவி அடைவார்கள். இங்கு நீங்கள் இராஜ்ய பதவி அடைய வந்துள்ளீர்கள். இது படிப்பு ஆகும். இதில் குருட்டு நம்பிக்கையின் விஷயம் இல்லை. இந்த படிப்பு அரசாட்சிக் கானது ஆகும். எப்படி அந்த படிப்பில் இலட்சியம் உள்ளது - வக்கீல் ஆக வேண்டும் என்றால் நினைவு அவசியம் கற்பிக்கும் ஆசிரியருடன் இருக்க வேண்டும். இங்கு உங்களுக்கு பகவான் கற்பிக் கின்றார். எனவே அவருடன் யோகம் (நினைவு) வைத்துக் கொள்ள வேண்டும்.

தந்தை கூறுகிறார் நான் பரந்தாமம் என்ற மிக மிக தொலைவான

இடத்திலிருந்து வருகிறேன். பரந்தாமம் எவ்வளவு உயரத்தில் உள்ளது. சூட்சும வதனத்தை விடவும் உயர்ந்தது ஆகும். அங்கிருந்து வருவதற்கு எனக்கு ஒரு வினாடி ஆகிறது. அதை விட வேகமாக செல்வது வேறு எதுவும் இருக்க முடியாது. ஒரு வினாடியில் ஜீவன் முக்தி அளிக்கிறேன். ஜனகரின் உதாரணம் உள்ளது அல்லவா? இப்பொழுதோ நரகம் பழைய உலகம் ஆகும். புது உலகம் என்று சொர்க்கத்தை கூறப்படுகிறது. தந்தை நரகத்தை விநாசம் செய்வித்து சொர்க்கத்தினை ஸ்தாபனை செய்கிறார். மற்றபடி அவரை சர்வ வியாபி என்று கூறுவதில் என்ன கிடைக்கும்? ஒன்றுமேயில்லை. தந்தையோ வந்து சொர்க்கத்தின் எஜமானர் ஆக்குகிறார். மற்ற எல்லா ஆத்மாக்களும் சாந்திதாமத்திற்குச் சென்று விடுவார்கள். ஆத்மா அழியாதது. ஆத்மாவின் பாகம் கூட அழியாதது. ஆத்மா சிறியது பெரியது என்று எப்படி ஆக முடியும்? ஆத்மா இருப்பதே நட்சத்திரமாக பெரியது சிறியது என்று ஆக முடியாது. இப்பொழுது நீங்கள் இறை தந்தையின் மாணவர்கள் ஆவீர்கள். இறை தந்தை ஞானக்கடல், ஆனந்தக்கடல் ஆவார். அவர் உங்களுக்கு கற்பித்துக் கொண்டிருக்கிறார். இந்த படிப்பின் மூலம் தான் தேவி தேவதை ஆவோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் பாரதத்திற்கு சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். முதன் முதலிலோ தந்தை யினுடையவர் ஆகவேண்டும். வேறு இடங்களிலோ குருவிடம் செல்கிறார் கள். அவருடையவர் ஆகிறார்கள் அல்லது அவரை தங்கள் குருவாக ஏற்கிறார்கள். இங்கோ இருப்பது தந்தை. எனவே முதலில் தந்தையின் குழந்தையாக ஆகவேண்டியுள்ளது. தந்தை குழந்தைகளுக்கு தனது ஆஸ்தியை அளிக்கிறார். தந்தை கூறுகிறார், குழந்தைகளே, நீங்கள் பண்டமாற்றம் செய்யுங்கள் உங்களிடம் இருக்கும் தேவையற்றது என்னுடையது, என்னுடையது எல்லாமே உங்களுடையது. தேகத்துடன் சேர்த்து எதெல்லாம் உள்ளதோ அவை அனைத்தையும் எனக்குக் கொடுங்கள். நான் உனது ஆத்மா மற்றும் சரீரம் இரண்டையும் தூய்மையாக ஆக்கிவிடுவேன் மேலும் பின் இராஜ்ய பதவியும் அளிப்பேன். உங்களிடம் எதெல்லாம் இருக்கிறதோ அதை சமர்ப்பணம் செய்யுங்கள். என்னை டிரஸ்டி ஆக்குங்கள். எனது ஸ்ரீமத்படி நடக்கவும். ஜனகர் இராஜ்ய பாக்கியத்துடன் சேர்த்து அனைத்தையும் சமர்ப்பித் தார் எனவே அவருக்கு ஜீவன் முக்தி கிடைத்தது. பாபா இவை அனைத்துமே உங்களுடையது. என்னை வாரிசு ஆக்குங்கள் என்று நீங்கள் கூறுகிறீர்கள். நான் 21 பிறவிகளுக்கு உங்களை வாரிசு ஆக்குகிறேன் என் வழிப்படி நடக்கவும் அவ்வளவே தான். தாராளமாக தொழில் ஆகியவை செய்யுங்கள். வெளிநாடு செல்லுங்கள், என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். என்வழிப்படி நடக்கவும் அவ்வளவே தான். எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மாயை அடிக்கடி தோல்வியுறச் செய்யும். எந்த ஒரு விகர்மமும் செய்யக்கூடாது. ஒவ்வொரு அடியும் ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். அப்பொழுது நீங்கள் சிரேஷ்டமாக ஆவீர்கள். தந்தையோ வள்ளல் ஆவார். உங்களை டிரஸ்டியாக ஆக்குகிறார் அவ்வளவே. இந்த குழந்தைகள், செல்வம் எல்லாமே பகவானால் கொடுக்கப் பட்டது என்று கூறவும் செய்கிறீர்கள். இப்பொழுது பகவான் கூறுகிறார்: எனக்கு கொடுங்கள், நான் பண்டமாற்றம் செய்கிறேன். நீங்கள் ஸ்ரீமத்படி நடந்தீர்கள் என்றால் நான் உங்களை இதுபோல சிரேஷ்டமாக ஆக்குவேன் என்று நான் உறுதி கொடுக் கிறேன். இது இராஜ யோகம் ஆகும். இந்த லட்சுமி நாராயணர் கூட இந்த இராஜயோகத்தினால் இதுபோல ஆகியுள்ளார்கள். லட்சுமி-நாராயணரின் கோவிலை கட்டிய பிர்லாவிற்கே இந்த லட்சுமி நாரயாணர் இவ்வளவு செல்வந்தர் எப்படி ஆனார் என்பது தெரியாது. இப்பொழுது

தந்தை புரிய வைக்கின்றார் - இங்கு இருக்கும் ஏழைகள் அங்கு செல்வந்தர் ஆவார்கள் மற்றும் செல்வந்தர்களுடையது எல்லாமே மண்ணோடு மண்ணாக ஆகிவிடும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுத்த குழந்தைகளுக்கு தாய் தந்தையான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) தாய் தந்தையின் சிம்மாசனத்தில் அமருபவர் ஆவதற்கு தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். இரண்டு புறமும் கடமைகளை நிறைவேற்றியபடியே படிப்பின் மீது முழு கவனம் கொடுக்க வேண்டும்.

(2) எந்த ஒரு தீய காரியமும் செய்யக்கூடாது. மிகவும் எச்சரிக்கையுடனிருந்து ஸ்ரீமத் படி நடந்து கொண்டேயிருக்க வேண்டும். அவசியம் டிரஸ்டி ஆக வேண்டும்.

வரதானம் : தனது நெற்றியின் நடுவில் தந்தையின் நினைவை வெளிப்படுத்தும் நெற்றியின் மணி (மஸ்தக்மணி) ஆகுக

மஸ்தக் மணி என்பது எவரது எண்ணத்தில் சதா பாபாவின் நினைவு இருக்குமோ, அதனையே உயர் நிலை என சொல்லப்படும். அத்தகைய உயர் நிலையில் நிலைத்திருக்கும் சிரேஷ்ட ஆத்மாவாக தன்னை உணர்ந்து முன்னேறிக் கொண்டேயிருங்கள். இந்த உயர் நிலை யில் ஒருவர் கீழே இருக்கும் பல விசயங்களை சுலபமாகவே கடந்து விடுகின்றார். இன்னல்கள் கீழே தங்கி விடுகின்றது, தானோ உயரே இருக்கின்றார்.

சுலோகன்: கவலையற்ற இராஜா நிலையை அனுபவம் செய்ய வேண்டுமெனில், எனது என்பவைகளை உனது என மாற்றி விடுங்கள்.